**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 179/2019</u>**

நாள் 10.03.2025

DW1 – குமார்

த/பெ – கருப்பசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2025.)**

**<u>4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி அலமேலு எனது உடன் பிறந்த சகோதரரி. நான் எனது சகோதரி அலமேலுவுடன் நல்ல உறவு முறையில் தான் இருந்து வருகிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், நான் எனது சகோதரியுடன் நல்ல உறவு முறையில் தான் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். எனது மூத்த மகன் அமர்நாத்திற்கு திருமணம் ஆகிவிட்டது. எனது இரண்டு மகன்களும் கோயமுத்தூரில் வேலையில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நானும், எனது மகன்களும் கோயமுத்தூரில் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் இல்லை, நான் பெருமாநல்லூரில் வசித்து வருகிறேன். நானும், எனது மகன்களும் கோயமுத்தூரில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றாக குடியிருந்து வருகிறோம் என்றும், ஆனால் நான் இந்த வழக்கிற்காக வேண்டி பெருமாநல்லூரில் வசித்து வருகிறேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோயமுத்தூரில் வசித்து வரும் நிலையில் அந்த முகவரிக்கு எனது குடும்ப அட்டை, ஆதார் அடையாள அட்டை ஆகியவைகளை மாற்றாமல் பழைய முகவரிலேயே வைத்துள்ளதை சாதகமாக பயன்படுத்தி இந்த வழக்கில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாடகைக்கு இருந்தவர்களிடம் வாடகை ஒப்பந்தம் போட்டுக்கொடுத்ததாக

நான் சொல்வதை காட்டும் வகையில் அது சம்பந்ததப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. இந்த தாவா சொத்தானது 11.04.2004–ம் தேதியிட்ட பதிவு பாக பிரிவினை பத்திரத்தில் ஏ செட்யூல் சொத்தாக எங்கள் குடும்பத்திற்கு கூட்டாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 6–ல் அப்துல் ரசாக் என்பவருக்கு வாடகைக்கு விட்டு அவர் காலி செய்ததற்கு பின்னிட்டு கடந்த 2010–ம் வருடத்தில் இந்த வழக்கில் 4–ம் பிரதிவாதிக்கு வாடகைக்கு விட்டதாக சொல்லியுள்ளதை காட்டும் வகையில் அது சம்பந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழியாக தான் வாடகைக்கு விட்டேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் மகாலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கு வாடகைக்கு விட்டு மாத வாடகையை நான் தான் வசூல் செய்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் எனது அண்ணன் மகன் ராகவி வங்கி கணக்கிற்கு மாத வாடகையை செலுத்தி விடுவார்கள். அந்த ராகவியின் வங்கி கணக்கு விபரப்பட்டியலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கில் வேறு நபர்களின் பெயருக்கு பொதுஅதிகார பத்திரமோ, விற்பனை ஆவணமோ நானும், வாதியும், எனது சகோதரரும் மற்றும் எனது தாயாரும் சேர்ந்து எழுதி கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 பொது அதிகார பத்திரத்தில் உள்ள குமார் என்று 3–வது ஆக உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் இல்லை. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தாவா சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற

நோக்கத்துடன் தான் 4–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 பொது அதிகார ஆவணத்தை எழுதி கொடுத்து பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, வாடகை ஒப்பந்தம் எழுதுவதாக சொல்லி பொது அதிகார ஆவணத்தை எங்களை ஏமாற்றி ஏற்படுத்தி கொண்டார்கள். அதில் எங்களிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். 4–ம் பிரதிவாதி எங்களிடம் வாடகை ஒப்பந்த பத்திரம் என்று சொல்லி எங்களை ஏமாற்றி பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தி எங்களிடம் கையொப்பம் வாங்கி கொண்டதாக நாங்கள் சொல்வது சம்பந்தமாக காவல் துறையில் 4ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் நானும், எனது அண்ணன் சண்முகசுந்தரமும் புகார் கொடுத்தோம், ஆனால் இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அந்த வழக்கை முடித்து கொண்டு வருமாறு போலீசார் சொல்லிவிட்டார்கள். பொது அதிகாரம் பெற்ற 4–ம் பிரதிவாதி மூலம் 5–ம் பிரதிவாதி கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டு சொத்தில் வாடகைக்கு இருந்து வரும் நபர்களை காலி செய்யுமாறு 5–ம் பிரதிவாதி கேட்ட போது தான் மேற்படி வீதம் 4,5 பிரதிவாதிகள் ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்ட விபரம் எனக்குத் தெரிய வந்தது. அவ்வாறு எந்த தேதியில் எனக்குத் தெரிய வந்தது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

4. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை எனது சகோதரி வாதி அலமேலு வழக்கறிஞர் அலுவலகத்தில் கோயமுத்தூரில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் திருப்பூரில் வைத்து தயார் செய்யப்பட்டது. வழக்கு சொத்தை விற்பனை செய்ய வேபண்டும் என்ற நோக்கத்துடன் நாங்கள் அனைவரும் சேர்ந்து

4–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 பொதுஅதிகார ஆவணத்தை எழுதி கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொது அதிகார ஆவணத்தை பதிவு செய்யும் முன்பு சார்பதிவாளர் அந்த ஆவணத்தில் உள்ள விபரங்களை எங்களுக்கு படித்து காண்பித்து உறுதி செய்து கொண்ட பிறகு தான் அதை பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கு படித்தே காண்பிக்கவில்லை. மேற்படி விபரத்தை இந்த வழக்கிற்காக வேண்டி எங்களுக்கு படித்து காண்பிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பொது அதிகார பத்திரம் அமலுக்கு வந்து அதன் பேரில் கிரைய ஒப்பந்த பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்த நீட்டிப்பு பத்திரம் மற்றும் அந்த கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் ஆகியவைகளை 4–ம் பிரதிவாதி பெரியசாமி என்பவருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எங்களுக்குத் தெரியாது. அதற்கு பிறகு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி 4 ஆண்டுகள் கழித்து தான் 16.07.2016–ம் தேதியில் 5–ம் பிரதிவாதிக்கு 4–ம் பிரதிவாதி பதிவு கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எங்களுக்குத் தெரியாது. 5–ம் பிரதிவாதி தான் கிரைய பெற்ற தேதியிலிருந்து நாளது தேதி வரையில் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. 5–ம் பிரதிவாதி தாவா சொத்தில் M.M.Clothing என்ற பெயரில் துணிக்கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அதனால், 5–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு வழக்கு சொத்தில் நாங்கள் ஒரு போதும் வசித்து வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் 5–ம் பிரதிவாதியிடமிருந்து அக்கிரம லாபமடையும் நோக்கில், இந்த வழக்கை நாங்கள் பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிக்கு 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாளிகள் என்ற முறையில் இந்த வழக்கை வாதி மூலம் தாக்கல் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள 29.01.2021–ம் தேதியிட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் எங்களால் இந்த வழக்கிற்காக வேண்டி இந்த வழக்கிற்கு பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை 4–ம் பிரதிவாதி மூலம் 5–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டு அதற்குரிய மறுபயனை நாங்கள் ஏற்கனவே அனைவரும் பெற்றுக்கொண்டு விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல, மறுபயன் எதுவும் நாங்கள் வாங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. 5–ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற பிறகு 2020–ம் ஆண்டில் சிட்டி யூனியன் பேங்க் பெருமாநல்லூர் கிளையில் அடமானம் வைத்துள்ளார் என்றவிபரம் எனக்குத் தெரியாது. அதை 2022–ம் ஆண்டு கால நீட்டிப்பும் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுவும் எனக்குத் தெரியாது. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் நாங்கள் வாதி மூலம் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.03.10 16:00:24 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**